**மாகாண மட்டத்தில் அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றுதல் செயற்திட்டம் (ரீஎஸ்ஈபி) - 2015**

---

அறிவு மையத்தின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றுதல் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II (பீ) (3) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அவுஸ்திரேலிய நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2013 யூலை 18 ஆந் திகதியிடப்பட்ட ரீஎவ் 013267 ஆம் இலக்க அவுஸ்திரேலிய மானிய உடன்படிக்கையின் II (பீ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளித்தல், காலப்பகுதி

---

நிதியளித்தல் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் தேசிய மட்டத்தில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட அதேவேளை மாகாண மட்டத்திலான நடவடிக்கைகளானவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினாலும் அனைத்து மாகாண சபைகளிலுமுள்ள மாகாண கல்வி அமைச்சுக்களாலும் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்ட மதிப்பாய்வு ஆவணத்தின் பிரகாரம், நாட்டின் பொதுவான கல்வித்துறை முகங்கொடுக்கின்ற சவால்களை முன்வைக்கின்ற கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012-2016 இனை அமுல்படுத்துவதற்கான நிதி ஆதரவை வழங்குவதற்கு செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கையில் அறிவுசார்ந்த பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அடிப்படையினை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாந்தர கல்வியின் தரத்தை அடைந்து கொள்வதற்கான வழிகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளித்தல் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் ரூபா 11,000 மில்லியனுக்குச் சமமான எஸ்டீஆர் 64.1 மில்லியன் (யூஎஸ் டொலர் 100 மில்லியன்) கடன் அளிப்புக்கள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் அவுஸ்திரேலியன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் யூஎஸ் டொலர் 11 மில்லியன் மானியத்தை வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அவ்வாறான நிதிகளில் 70 சதவீதமானவை மாகாண கல்வி அதிகாரசபைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 30 சதவீதமானவை கல்வி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருந்த நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் 30 அளவில் பூர்த்திசெய்வதற்குத் பட்டியலிடப்பட்டிருந்தது. மாகாண மட்டத்தில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினாலும் மாகாண கல்வி அமைச்சுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்களது ஒதுக்கீட்டுக் கணக்குகளின் ஒன்று திரட்டலான இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் தொடர்புபட்ட மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஏ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

2. நிதிக்கூற்றுக்கள்
---------------------------

2.1. அபிப்பிராயம்
--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களின் 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் தொடர்புபட்ட மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. மேற்கூறிய ஒதுக்கீட்டுக் கணக்குகளானவை பொதுத்திறைசேரியின் கணனி அச்சுப் பிரதிகள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களால் பேணப்பட்ட ஏடுகள், பதிவேடுகள், குறிப்புக்கள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன. கடன் மற்றும் மானியப் பெறுவனவுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கிரயங்களானவை மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களது செயற்பாடு மற்றும் மேற்பார்வை ஆதரவு அலகினாலும் 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் உரியமுறைப்படி பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தின் திரண்ட நிதியளித்தல் முகாமைத்துவ அறிக்கையின் பிராகரம், அனைத்து மாகாண சபைகளினதும் மாகாண கல்வி அமைச்சுக்களாலும் செயற்பாட்டு மற்றும் கண்காணிப்பு ஆதரவு அலகினாலும் அனைத்து நிதி மூலங்களிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 122,872.66 மில்லியனாக இருந்தது. கல்வித்துறைக்கான பாதீட்டு மதிப்பீட்டிற்கு ஆதரவளிப்பதற்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்தும் அவுஸ்திரேலிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகளின் நிதியளித்தல், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதும் 2015 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு போன்றன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ | 59.00 | 7,670 | 2,430 | 14.60 | 2,004 | 48.60 | 6,329 |
| ஏ!எஸ்ஏஜடீ | 11.00 | 1,430 | 550 | 5.00 | 750 | 18.00 | 2,407 |
| மொத்தம் | 70.00 | 9,100 | 2,980 | 19.60 | 2,754 | 66.60 | 8,736 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மாகாண சபைகளின் மாகாண அமைச்சுக்களுக்கு 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 124,917 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ஆண்டின் இறுதியில் ரூபா 1,856 தொகையான நிதி ஏற்பாடு செலவு செய்யப்படாது காணப்பட்டது. தென், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள மாகாண கல்வி அமைச்சுக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டில், 20 சதவீதத்திற்கு மேற்பட்டவைகள் செலவு செய்யப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மத்திய மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சுக்களுக்கு செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 492 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில் ஆண்டின் இறுதியில் ரூபா 145 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செலவு செய்யப்படாது காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 183 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் வட மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சினது வைப்புக் கணக்கில் ரூபா 29 மில்லியன் தொகை காணப்பட்டது.

3.2 பௌதீகச் செயலாற்றல்

--------------------------------

நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டோலை 01 இன் பிரகாரம், ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்விக்கான அணுகுதல்களை ஊக்குவித்தல், கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், கல்விச் சேவைகளின் நல்லாட்சிகளையும் வழங்குதல்களையும் வலுப்படுத்துதல் ஆகிய மூன்று பிரதான குறிக்கோள்களின் கீழ் பண அளித்தல் இணைப்பு குறிகாட்டிகளை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு தரப்படுகின்றன.

(அ) பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், 135 மாகாண பாடசாலைகளிலுள்ள மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களுக்காக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டு அவ்வாறான ஆய்வுகூடக் கட்டிடங்களின் அனைத்து நிர்மாண வேலைகளும் பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. சப்ரகமவிலுள்ள உடகம மஹா வித்தியாலயத்தில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் மாணவர்களின் பயன்பாட்டிற்காக 2015 ஏப்ரல் 06 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டிருந்த போதிலும் மின்சார விநியோகம் இல்லாமையின் காரணமாக ரூபா 6.25 மில்லியன் பெறுமதியான 61 கணனிகளும் ஏனைய துணைப் பொருட்களும் 2015 ஏப்ரல் 06 இலிருந்து 2015 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 14.33 மில்லியன் கிரயமான 151 கணனிகளையும் துணைப் பொருட்களையும் செயற்திட்டம் கொள்வனவு செய்து சப்ரகமுவ மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளுக்கு விநியோகித்திருந்தது. 10 கணனிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது செயற்பாட்டு முறைமைகளின் பாதிப்புக்களின் காரணமாக 02 கணனிகள் பழுதடைந்து காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும் எந்தவொரு கணனிக்கும் வெளிப்பக்க ஒலிபெருக்கிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அனைத்து உபகரணங்களும் பரீட்சிக்கப்பட்டு அவை மாதிரிகளுடன் இணங்கியிருந்ததாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சான்றுபடுத்தியிருந்த போதிலும் கணனிகளுக்கான தயாரிப்பாளர்களின் உத்தரவுப் பத்திரங்கள் கணக்காய்வு நோக்கத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்களத்திற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 129.38 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 96.38 மில்லியன் தொகையான ஒதுக்கீடு உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும் ஆண்டின் போது ரூபா 5.04 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் 2015 திசெம்பர் 31 இலும் மத்திய மாகாணத்திலுள்ள மாகாண பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. கொழும்பில் 2015 செப்தெம்பர் 31 இலிருந்து 2015 ஒக்தோபர் 04 வரை இடம்பெற்ற நாடளாவிய விளையாட்டு விழாவிற்காகப் பங்குபற்றிய பாடசாலைகளுக்கு ரூபா 2.92 மில்லியன் கிரயத்தில் 3000 அலகு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மத்திய மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் அவ்வாறான விளையாட்டு உபகரணங்கள் மத்திய மாகாணத்திலுள்ள மாகாண கல்வி அமைச்சிற்கு 2015 திசெம்பர் 09 மற்றும் 2016 சனவரி 01 ஆந் திகதிகளிலேயே வழங்கப்பட்டிருந்தன. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களால் பாதிப்படைந்த பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததனால் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விபரமான கணக்காய்வின் பிரகாரம் பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடுகள் மீதான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதிலுள்ள தாமதங்கள், தர உள்ளீட்டு நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை, கற்றல் நோக்கங்களுக்காக தளபாட மற்றும் உபகரண வளங்கள் இல்லாமை போன்ற பலவீனங்கள் வடமேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் புலமைப்பரிசில் மாணவர்களின் பணங்கள் திருப்பி அனுப்பப்பட்டு சம்பந்தப்பட்ட மாகாணங்களின் வலயக்கல்வி

அலுவலகங்களின் வைப்புக்கணக்குகளில் அப்பணப் பெறுவனவுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மாகாண கல்வி அமைச்சுக்களால் பேணப்பட்ட குறிப்புக்களின் பிரகாரம், வடக்கு, வடமேற்கு, வடமத்திய, ஊவா, மேற்கு, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலுள்ள பின்தங்கிய பாடசாலைகளில் முக்கிய பாடங்களுக்கான பாடசாலை ஆசிரியர்களுக்கு அதிகளவு வெற்றிடங்கள் காணப்பட்ட அதேவேளை சம்பந்தப்பட்ட மாகாணங்களிலுள்ள நகரப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மிகையாகக் காணப்பட்டார்கள். மேலும் சப்ரகமுவ, ஊவா, வடமேற்கு, வடமத்திய மாகாணங்களில் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசியர்களுக்குமான இடமாற்றத் திட்டமானது முறையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பாடசாலையில் காணப்பட்டனர். மேலும் சப்ரகமுவ மற்றும் வடமேற்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் குறைந்த பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தமை விபரமான கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

3.3 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்தில் 2015 நவம்பர் 16 இலிருந்து நவம்பர் 29 வரை நடைபெற்ற பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவ மற்றும் ஆசிரியர் அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான பயிற்சி செயலமர்வில் பங்குபற்றிய 23 உத்தியோகத்தர்களுக்கான விமான டிக்கட்டுகள், இடைநேர் செலவுகள் என்பன தொடர்பாக ரூபா 24.23 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவ முறைகளை அமுல்படுத்துவதில் நேரடியாக ஈடுபடாதிருந்த 04 உத்தியோகத்தர்களும் பயிற்சி செயலமர்வில் பங்குபற்றியிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4.20 மில்லியன் கூட்டுமொத்தமான பிரயாண மற்றும் ஏனைய செலவுகள் செயற்திட்டத்தினால் செலவுசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.4 புறநடையான செலவுகள்

பயிற்சியும் இயலுமை அபிவிருத்தியும் மற்றும் தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து சப்ரகமுவ மாகாணத்தின் கல்வி அமைச்சினால் 2014 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 2 மில்லியன் கிரயத்தில் 18 மடிக் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சை தவிர்த்து செயற்திட்ட நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடாத நிறுவனங்களால் வேலைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 08 கணனிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.